

# वैद्यचन्द्रिका

மிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் மாதப் பத்ரிகை

Vol. 9 | July, 1947 | No. 7

ஆசிரியர் :

V. B. நடராஜ சாஸ்த்ரீ, ஆயுர்வேதாசார்ய.
வைத்ய விசாரத, வைத்யவாசஸ்பதி.

ப்ரகாசகர் : பண்டித ஸ்ரீ. மெ. ஸௌந்தரராஜாசார்யார்.

வருஷச்சந்தா ரூ. 3—0—0

# தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலம்.

அகில பாரத வர்ஷீய ஆயுர்வேத மஹாஸம்மேளனத்தின்
தமிழ்நாடு கிளைச்சங்கம்.

வருஷச் சந்தா ரூ. 3-0-0.

ஸ்ரீ T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, M. A. L. I. M.
**பொதுக் கார்யதர்சி, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,**
**9. கேசவபெருமாள் மேலத்தெரு, மைலாப்பூர், மதராஸ்.**

என்ற விலாஸத்திற்கு மண்டலத்தின் பொது நிர்வாஹ விஷயங்களைப்பற்றி எழுதிக்கொள்ள வேண்டும்.

---

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின்
மாதப் பத்திரிகை.

இங்கிலீஷ் மாதம் முதல் வாரத்தில் வெளியாகும்.
மண்டல அங்கத்தினர்களுக்கு இனமாய் அனுப்பப்படும்.

ஸ்ரீ A. ராகவராவ், A. L. I. M.
**உபகார்யதர்சி, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,**
**17. சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம் போஸ்டு,**
**திருச்சினாப்பள்ளி.**

என்ற விலாஸத்திற்கு மண்டலத்தின் சந்தாத்தொகை அனுப்பவேண்டும். **வைத்திய சந்திரிகையின் விளம்பர விஷயங்கள்,** சந்தாதாரரின் விலாஸம் மாறுதல், பிரதி இங்கிலீஷ் மாதம் 15-ந் தேதிக்குள் சந்திரிகை கிடைக்காவிடில் உடனே தெரிவித்தல், மற்றும் வைத்திய சந்திரிகையின் நிர்வாஹத்தைப் பற்றிய விஷயங்களுக்கும் எழுதிக்கொள்ள வேண்டும்.

---

ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரி, ஆயுர்வேதாசார்ய,
**ஆசிரியர்: வைத்திய சந்திரிகா,**
**ஆத்ரேயாசிரமம், தென்னூர் ரோடு, திருச்சினாப்பள்ளி.**

என்ற விலாஸத்திற்கு வைத்திய சந்திரிகையிலும் ஆரோக்கிய சந்திரிகையிலும் பிரசுரம் செய்யவேண்டிய கட்டுரைகள், செய்திக் குறிப்புகள், ஸந்தேஹங்கள், பதில்கள், சர்ச்சைகள், ரோகக் குறிப்புகள், (Case Sheets) விமர்சத்திற்குப் புத்தகங்கள், பதில் பத்திரிகைகள் இது போன்றவைகள் எல்லாம் பிரதி இங்கிலீஷ் மாதம் 15 தேதிக்குள் ஆசிரியருக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தந்வந்தரயே நம:

धर्मार्थकाममोक्षाणामारोग्यं मूलमुत्तमम् ।

# மருந்துப் பச்சிலை மூலிகைகள்

*[ஸ்ரீ. வி. பி. நடராஜ சாஸ்திரி, ஆயுர்வேதாசார்ய அவர்களால் 26-5-47-ல் திருச்சி ரேடியோ நிலயத்தில் பேசப்பட்டது]*

மாமுனிவர் அகஸ்தியர் தன்னிடம் வைத்திய சாஸ்திரம் பயிலும் மாணவர்களைப் பரீக்ஷை செய்யும் நோக்கத்துடன் அவர்களைக் கட்டளையிடுகிறார். 'இவ்வனத்திலிருந்து பிணியகற்றுவதற்கு உபயோகமற்ற சில புற்பூண்டுகளைக் கொணர்ந்து இப்பசுவிற்குக் கொடுங்கள். பிணியகற்றப் பிரயோஜனப்படும் பச்சிலைகளை வீணிலழிக்க வேண்டாம்' என்று. சிடர்கள் வனவனாந்திரங்கள் முற்றிலும் சுற்றி வந்தனர். புற்பூண்டுகள் செடி கொடி மரங்கள் அனைவற்றையுமுற்று நோக்கினர். நோய்களைத் தீர்க்கும் குணமற்றதான ஒரு பச்சிலை கூட இந்த வைத்திய மாணுக்கருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. வெறுங்கையுடன் திரும்பி வந்தனர். ஆசானிடம் பணிந்துரைத்தனர் 'பிணி போக்குவதில் உபயோகப்படாத புல் ஒன்றுகூட இக் கானகத்தில் இல்லை' என்று. பசுவின் பசியைக் குறித்து வருந்தினர். ஆசாரியர் அகஸ்திய முனிவர் மனம் மகிழ்ந்தார். கற்பித்த வைத்திய வித்தையின் ஸூக்ஷ்ம தத்துவத்தைப் பையன்கள் கசடறக் கற்றுக் கொண்டுள்ளார்கள் என்று முனிவருக்கு ஆனந்தம்.

தத்துவம் என்னவெனில், 'மருந்தாக ஆக முடியாத பச்சிலை வஸ்து பிரம்ம சிருஷ்டியிலேயே இல்லை' என்பதே. இது ஏன் இந்தக் காரியத்தைச் செய்யவல்லதாயுள்ளது என்று அறிய திரவியத்தின் உள் தத்துவங்களை ஆராய்ந்து கவனிக்கும்பொழுது இந்த தத்துவம் புலப்படுகிறது. சிருஷ்டியிலிருக்கும் ஸகல பச்சிலைகளும் ஐந்துவித மூல தத்துவங்களுக்குள் அடங்கிவிடுகின்றன. பிராணிகளும்

அவைகளுடைய பிணிகளும் கூட இவ்வைந்து மூல தத்து வங்களுக்குள் அடங்கிவிடுகின்றன. ஆகவே மூலதத்து வங்களைக் கவனித்துப் பிரயோகம் செய்யப்படுமாகில் மருந் தாக ஆகமுடியாத அல்லது ஒரு காரியமற்ற பச்சிலை மூலி கை சிருஷ்டியில் தாவர வருக்கத்தில் இருக்கமுடியாது என்ற உண்மை ஊர்ஜிதமாகும்.

**'जगत्येवमनौषधम् । न किंचिद्विद्यते द्रव्यं'** என்று வாக்படம். பொதுவில் இயற்கை இவ்விதமாயினும் தாவர இனத்தில் சில மூலிகைகளில் மட்டுமே பலவித மேன்மைகள் சிறப் புற்று விளங்குகின்றன. பலவித உபயோகங்களும் பயன் களும் ஒரு மூலிகையில் ஒருமிக்கக் கிடைக்கப்பெறின் விசேஷமல்லவா? இவ்விதமான சில மூலிகைகளைக் கொண்டே பெரும்பாலும் பல பிணிகளைப் போக்க முடி யும். அதிக மேன்மை வாய்ந்துள்ள சில மூலிகைகளை மட்டுமாகிலும் பொதுஜனங்களுக்கு ஏராளமாய் எளிதில் பெறும் வசதி செய்யவேண்டியது மிகவும் அவசியம். இதற்குப் பச்சிலைகளைக் காடுகளிலும் மலைகளிலும் விசேஷ மாய் உற்பத்தி செய்யவேண்டும்.

மருந்தாக உபயோகிக்கப்படும் மூலிகைகள் எல்லாம் எங்கும் தானாகவே முளைத்து வருகின்றனவே. எதற்கா கப் பயிரிடவேண்டும் என்று எண்ணுதல் தவறு. தானாக முளைத்து வளரும் மூலிகைகளில் சில பிரதேசங்களில் உள்ளவை மட்டிலுமே குணங்கள் சரியானபடி நிறைந் திருக்கும். வளமற்ற பிரதேசங்களில் வளரும் மூலிகை களில் சரியான சக்தியிருக்காது. ஆதலால் ஊட்டமாய் வளர லாயக்கான இடங்களில் வளர்க்கவேண்டியது மிக வும் அவசியம்.

மேலும் தானாய் முளைக்கும் மூலிகைகள் நாட்டின் தேவைக்குப் போதாது. தேவைக்குப் போதிய அளவு அகப்படாமையினால் இவைகளுடைய விலையும் ஏறியுள் ளது. பயிர் செய்து நிரம்ப கிடைக்கப் பெறச் செய்தால் மருந்துகள் மக்கட்கு மலிவான விலையில் கிடைக்கச் செய்ய முடியும். ஏனைய பலகாரணங்களால் மருந்து மூலிகைகளைத்

காடு மலைகளில் அதததற்கேற்ற வளம் வாய்ந்த பிரதேசங்களில் திறம் பெறப் பயிர் செய்து பக்குவமான காலத்தில் சேமித்து உபயோகத்திற்கு விநியோகம் செய்வதால் பொதுஜனங்களுக்கு ஆரோக்கிய இன்பம் அடையும் வழிகளில் பெரும்பயனேற்படும். மூலிகைகளைப் பயிரிடுவதினுலுண்டாகும் செலவையும் உபயோகத்தையும் வர்த்தகக் கண்ணுல் லாப நஷ்டம் கவனித்தால் முடிவு பலவகைகளாக இருக்கலாம். ஆனுல் நீண்டகாலத்தில் வர்த்தக முறையிலும் லாபகரமாகவே இருக்கும்படி உள்நாடு வெளிநாடுகளில் வியாபாரம் திறம் பெற நடத்த முடியும். லாப நஷ்டம் எவ்விதமாயினும், நல்ல ஸாரம் நிறைந்த உயர்ந்த மூலிகைகளையும் அதன் ஸத்துக்களையும் வியாதியில் வருந்தும் மக்கட்கு அளிப்பதில் ஏற்படும் உபகாரத்தையும், அதனுல் ஜனங்கள் பெறும் ஆரோக்கியச் செல்வத்தையும் ஒப்பிடுவோமாகில் இம் மூலிகைகளைப் பயிரிடுவதில் ஏற்படும் சிலவோ சிரமமோ கவனிக்கக் கூடியதல்ல.

சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், பத்திரி, சோம்பு, ஜீரகம், ஓமம், பெருங்காயம், கடுகு, எள்ளு முதலிய பண்டங்கள் மனிதர்களுடைய தினசரி உணவிலும் உபயோகிக்கப்படினும், இவை அதிகமாக மருந்துகளாகவே எல்லா வைத்திய முறைகளிலும் விசேஷமாய் உபயோகப்படுகின்றன. தென்னிந்தியாவில் நீலகிரியிலும் மலையாளத்திலும் பயிராகும் இவை தேவைக்குப் போதிய அளவிலில்லை. பர்மாவிலிருந்து இந்தியாவிற்கு நீண்டகாலமாக இறக்குமதியாகிக் கொண்டிருந்தன. யுத்தத்தின் விளைவாக அபரிமிதமான விலையேற்றமும், வைத்திய உபயோகத்திற்குக் கிடைக்காமலுமாகிவிட்டன. வியாபார முறையில் மிக லாபகரமாக இப்பண்டங்களை நமது நாட்டில் பயிர் செய்யலாம்.

நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய் இம்மூன்றுக்கும் 'திரிபலா' எனப்பெயர். இவை ஔஷதங்களில் ஒப்பற்றவை என்று சொல்லுவது மிகையாகாது. ஒரு நெல்

லிக் களியில் அது உலர்ந்த பிறகும் கிடைக்கும் விடமின் 'ஸி', வெளிநாட்டில்தயாரித்து இங்குவிற்கப்படும் விடமின் 'ஸி' டாப்லெட்டுகளுடைய நான்கிற்கு மேலதிகமாயிருக்கு மென்று ஊகிக்கப்படுகிறது. விடமின் 'ஸி' டாப்லெட்டின் விலை உயர்வுக்கும் நெல்லி வற்றலின் விலை மலிவுக்கும் தாரதம்யம் கவனிக்க வேண்டும். நெல்லிக்காயில் புஷ்டிகர சக்தி மிக அதிகம். சியவனப்பிராசம் முதலிய ரஸாயன மருந்துகளில் பிரதானமாய் சேர்க்கப்படுகிறது. கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் இம்மூன்றும் மருந்துகளுக்கும் தைலங்களுக்கும் ஏராளமாய்த் தேவை. இவைகளுடைய மகத்துவத்தையும் மலிவையும் அறிந்து மக்களுக்கு இவைகள் விநியோகம் செய்யப்படின், இப்போது நமது தென்தேசத்தில் விளையும் இம்மரத்தின் காய்கள் ஒரு மாதத்திய உபயோகத்திற்கே தடவலாகலாம். இவைகளைப் பயிர் செய்வதிலும் காப்பாற்றுவதிலும் காய்களைச் சேமிப்பதிலும் செலவும், சிரமமும் மிகமிகக் குறைவு.

அமுக்கிராக்கிழங்கு :

இது இரண்டுவகை. தென்னாட்டில் விளைவதை நாட்டு அமுக்கிரா என்றும் வடநாட்டில் நாக்பூர் பிராந்தியங்களில் விளையும் ஓர்வகை கிழங்குக்கு சீமை அமுக்கிரா என்றும் பெயர் வழங்கப்படுகிறது. தென்னாட்டில் விளையும் அமுக்கிராவில் சீமை அமுக்கிராக்கிழங்கைப் பார்க்கிலும் மருந்து சக்திகள் குணங்கள் அதிகம் இருக்கின்றன வென்பது அநுபவ— ஆராய்ச்சிகளுடைய முடிவு. இது நமது நாட்டில் மணற் சாரியான மேட்டுப் பிரதேசங்களில் தானகப் பயிராகின்றது. 2, 4 அடி உயரம் வளரும் செடி. இலை விதைகளும் மருந்துகளில் உபயோகப்படினும் முற்றி விளைந்த வேர்க்கிழங்குகள்தான் மருந்தாக ஏராளமாய் உபயோகமாகின்றன. சேமித்து வைத்துள்ள கிழங்குகளில் நீண்டகாலம் வீர்யம் குன்றமலே இருக்கும். இக்கிழங்கு பலவித வாத ரோகங்களைப் போக்குவதுடன், நரம்புகளுக்குப் பலம் ஊட்டி சரீர தாதுக்களைப் போஷிப்பதிலும் சிறந்தது. இளங் குழந்தைகளுடைய ஆகார

வர்க்கத்தில் கேழ்வரகு, சோளம் முதலியதிலிருந்து மால்டு செய்த மாவுகளுடன் கலந்து உபயோகிக்கப்படின் குழந்தைகளுடைய புஷ்டியான வளர்ச்சிக்கும் பெரும் பயன் அளிக்கக்கூடியது.

இந்த உயர்ந்த மூலிகையின் விலை தற்சமயம் ஒரு பவுண்டுக்கு ஒரு ரூபாயாக இருக்கிறது. வட இந்தியாவில் 1, 2 ஆயுர்வேத மருந்து வியாபாரிகள் தங்கள் தேவைக்குத் தானாக விளைவது போதாததால் சிறிய காடுகளில் பயிர் செய்து கொள்ளுகிறார்கள். இதைப் பயிரிடுவதில் சிறிதும் சிரமமில்லை. மலைகளில் ஜலமின்றி தாராளமாய் பயிராகக் கூடியதே. ஒரு தடவை நிலத்தை உழுது விதைகளைத் தெளித்துவிட்டால் 3, 4 தடவைகள் கிழங்குகளை வெட்டி சேகரித்துக் கொள்ளலாம். பின்பும் நிலத்தை ஒருதடவை உழுதுவிட்டால் போதுமானது. தானாக விழுந்த விதைகளிலிருந்து கிழங்கு திரும்ப ஏராளமாய் தானாகவே விருத்தியாகும். சகலவித வைத்திய முறைக்காரர்களாலும் பலபல வகைகளில் உபயோகிக்கப் படுவதால்...... இப்பயிர் வர்த்தகத் துறையிலும் லாபகரமாயிருக்கக்கூடியது.

இதன் ஊட்டமான வளர்ச்சிக்குத் தனியாக எரு தேவையில்லை. களைகளைப் பிடுங்கிவிட்டால் போதுமானது. இச் செடியின் உலர்ந்த இலைகளைச் சேர்த்து பூமியில் பிரட்டி உழுதுவிடின் பயிர் நன்றாக வரும்.

**இருவகை நிலவேம்பு:**

இதிலும் தென்னிந்தியாவில் விளைவதை நாட்டு நிலவேம்பு என்றும், வட இந்தியாவிலிருந்து இங்கு வருவதை சீமை நிலவேம்பு என்றும் இங்கு கூறப்படுகிறது. இவை இரண்டுக்கும் குணங்கள் அநேகமாய் ஒன்றாகிலும், தனித் தனி ஜாதியாகும். சீமை நிலவேம்பு தென்னாட்டில் விசேஷமாய்ப் பயிராகாது. இதற்குப் பனியுள்ள இடந்தான் பொருத்தமானது. நாட்டு நிலவேம்பு ஆங்காங்கு தானாக வளர்ந்தாலும் கொல்லிமலையிலும், புதுக்கோட்டை விராளிமலையிலும் அதிக அளவில் விளைகின்றது. இந்த செடி 2, 3 அடி உயரம் வளரும். சுமார், 8, 9 மாதகாலத்தில் முற்றிக் காய்ந்துவிடும். காய்ந்த செடியில் ஸத்து பல ஆண்டுகளுக்குக் குறையாமலிருக்குமாதலால் சேகரித்து

வைத்தல் எளிது. ஆயுர்வேதம், அலோபதிக் இரு முறை களிலும் இது அதிகமாய் உபயோகப்படுகிறது. மலேரியா ஜ்வரங்களில் சில இடங்களில் கொயினுவினுல் குணம் கிடைக்காமல் நாட்டு நிலவேம்பு சேர்க்கை மருந்தினுல் குணம் கிடைத்திருக்கிறது. ஈரல் கட்டி என்று வழங்கும் Infantile liver enlargement–லும் இப் பச்சிலே விசேஷ குணம் வாய்ந்தது. இன்ன மெவ்வளவோ உபயோகமுள்ள இந்தப் பச்சிலே தேவைக்கு வேண்டிய அளவு கிடைப்ப தில்லே. வைத்தியர்கள் சிலர் வீட்டுத் தோட்டங்களில் கொஞ்சம் பயிர் செய்துகொண்டிருக்கின்றனர். அதிக அள வில் பயிர் செய்வதும் மிக எளிதே. ஈர நப்பு கொஞ்ச மிருக்கும் பள்ளத்தாக்கான இடங்களில் விதைகளே மழை காலத்திற்கு முன்பே பரவலாய் தெளித்துவிடவேண்டும். வேறு ஒன்றும் செய்ய வேண்டியதில்லே. 8, 9 மாதங்களுக் குப் பின் செடி பழுக்கும் தருணத்தில் வேருடன் பிடுங்கி சேமித்துக் கொள்ளலாம். விதைகள் வெடித்து பூமியில் உதிர்ந்தவைகள், அடுத்த மழைகாலத்தில் அபரிமிதமாய் தாளுகவே வளர்ந்துகொண்டே யிருக்கும். இப் பச்சிலே யை வளர்ப்பதற்குப் பிரத்யேகமாய் பூமியை ஒதுக்கி வைக்க வேண்டியது தவிர வேறு சிரமமில்லே.

அபினி. (Opium).

இது கசகசாக் காயிலிருந்து எடுக்கும் உறைந்த பால். காய் பழுக்காததற்கு முன்பும், புஷ்பத்தின் இதழ்கள் உதி ர்ந்து 7 நாட்கள் சென்ற பின்பும் காயின் மேல் நீளமாயும் வட்டமாயும் 2, 3 கீற்றுக்களே மேலோடு கீறி விட வேண் டும். கீற்றுப் பள்ளங்களிலிருந்து பால் வடியும். ஆழ மாய்க் கீறினுல் பால் வடியாது. பகலில் வெய்யில் வேளே யில் கீறினுல், கீறின வாய் வழியில் பால் உறைந்து கட்டி யாகக் கட்டிக் கொள்வதால் பால் தாராளமாய் வடியாது. ஆகையால் தினமும் மாலேப் பொழுதில் கீறி விட வேண் டும். இரவு முழுவதும் பால் வடிந்து உறைந்திருக்கும். காலேயில் இதைச் சுரண்டி எடுத்துக் கொள்ள வேண்டும். காயை இவ்விதம் 2, 3 தடவைகள் கீறிப் பால் எடுக்கலாம். பாலேச் சேகரித்ததும் வெய்யில் முதலியவைகளால் வரண்டு விடாதபடி இலேகளால் மூடி பத்திரப் படுத்த வேண்டும்.

அபினி இந்தியாவில் பாட்னுவிலும், மால்வா தேசத்திலும் விசேஷமாய் பயிர் செய்யப் படுகிறது. பாட்னு அபினியைப் பார்க்கிலும் மால்வா அபினி சிறந்தது எனக் கருதப் படுகிறது. இக்காயின் மேற்தோலிக்குப் போஸ்தக்காய் என்று பெயர். உள் விதைக்குக் கசகசா என்று பெயர். அபினி, கசகசா, போஸ்தக்காய் மூன்றுமே மருந்துகளுக்கு ஏராளமாய் உபயோகமாகின்றன.

அபினியில் குணங்கள், தோஷங்கள் இரண்டும் கலந்திருப்பினும் குணங்களே அதிகம். இந்திய யூரோபிய வைத்திய முறைகளில் தொண்டு தொட்டு உள்ளும், புறம்பும் உபயோகிக்கப் படும் உத்தமோத்தமமான ஔடதமாகும். இதன் கெடுதல்கள் எல்லாம் மருந்தாக உபயோகியாமல் மதியிழந்து உட்கொள்ளுவதினுல்தான். இதன் விலையை உத்தேசித்து தாராளமாய் மருந்துகளில் உபயோகிக்கமுடிவதில்லை. தென்னுட்டில் அபினியை வளர்க்கத் தகுந்த சீதோஷ்ண நிலை வாய்ந்த இடமில்லாமல் இல்லை.

### ஏழிலம்பாலை மரம்.

இலைகள் அனெகமாய் ஏழு ஏழாய் அமைந்திருப்பதால் இவ் விருக்ஷத்திற்கு ஏழிலம்பாலை என்று பெயர். வனங்களில்வானம்விளாவி ஓங்கிவளரும் இயல்புடைய மகத்தான மரமிது. தமிழ் நாட்டில் விசேஷமாய் காணப் படவில்லை. கேரள தேசத்தில் சுயமாய் வளருகின்றது. முதிர்ந்த மரத்தின் பட்டை 6, 7 அங்குலம் வரை கனமுடையது. சுவையில் கைப்பு நிறைந்தது. பட்டையின் உட்புறம் மஞ்சள் நிறமாயும் வெளிப்புறம் கரும் சாம்பல் நிறமாயுமுள்ளது. பட்டையே மருந்தில் ஏராளமாய் உபயோகமாகிறது. புஷ்பங்கள் வெண்மையாய் நறுமணம் வாய்ந்தவை. சின்கொனு மரத்தின் பட்டையிலிருந்து கொயினு என்னும் உப்பு ஸத்து எடுப்பதுபோல் ஏழிலம்பாலையின் பட்டையிலிருந்து ஒரு கசப்பு உப்பு ஸத்து (Ditamine) என்ற பெயருடன் எடுக்கப் படுகிறது. இது மலேரியா ஜ்வரங்களில் கொயினுவைப் போலவே கைகண்ட மருந்து. கொயினுவைக் காட்டிலும் பல மடங்கு மலிவு. காது முதலியவைகளைக் கெடுக்கும் துர்குணம் கிடையாது. ஏழிலம்பாலை ஆல், அரசு மரங்கள் போல் தீர்க்காயுசு பெற்றது. தோட்டம்

துறவுகளிலும் அரண்யங்களிலும் மலைகளிலும் எல்லா விதமண்களிலும் வளரக் கூடியவை. மலேரியா ஜ்வரத்தை சமனம் செய்யும் சக்தியும் மற்ற மருந்து குணங்களும் இதில் ஏராளமாய் இருப்பதால் சின்கொனு மரம் போல் ஏழிலம்பாலை மரமும் அதிக அளவில் நாட்டில் பயிர் செய்யப்படுமாகில் விசேஷ குணங்கள் நாட்டினருக்குண்டு. மைதிலா தீப கண்டத்தில் கொயினு உப்பு சண்டை சமயத்தில் முற்றிலுமகப்படாமலாகி விட்ட பொழுது கவர்ன்மெண்டு ஹாஸ்பிடல்களில் எல்லாவற்றிலும் மலேரியா ஜ்வரத்திற்கு உடனே சமனம் செய்ய ஏழிலம்பாலைப் பட்டை சத்து தான் உபயோகிக்கப் பட்டது.

**நிலாவாரை அல்லது சூரத்தாவாரை.** (Sanna)

இந்த செடி 3, 4 அடி உயரத்தில் படர்ந்து வளரும். இது இந்தியாவில் பல பாகங்களிலும் வளருகின்றதாயினும் திருநெல்வேலி ஜில்லாவில் பயிராகும் நிலாவாரைதான் குணத்தில் சிறந்தது எனக் கண்டறியப் பட்டிருக்கிறது. இதில் சாதாரணமாய் மூன்று வகைகளிருப்பினும் எல்லாம் குணத்தில் ஒன்றே. இதன் இலையும் காயும் உலகில் ஸகல வித வைத்தியர்களாலும் மருந்துகளில் பலவகைகளில் சேர்க்கப் படுகின்றது. இந்த செடி இந்தியாவிலிருந்து அயல் நாட்டுக்கும் அதிக அளவில் ஏற்றுமதியாகின்றது. நல்ல பொறுக்குச் சரக்கு வெளியூருக்குப் போய் விடுகின்றது. இந்திய வைத்தியருக்கு மிகமட்டமான சரக்குதான் எஞ்சி கிடைக்கிறது. இதைப் பயிர் செய்வதில் குறைந்த மூலதனச் செலவில் நல்ல லாபம் பெற முடியும். இதன் பிரதான குணம் குடலை சுத்தி செய்வதே.

இங்கு உதாரணமாய் எடுத்துக் கொண்ட சில மூலிகைகள் போன்ற பொது மக்கட்கு தினசரி வாழ்க்கையிற் பொதுவாய் வேதனை கொடுத்துக்கொண்டிருக்கும் பெரும்படியான பிணிகளை அகற்றுவதற்கு அவசியமான பச்சிலை மூலிகைகளை மட்டிலாவது முடிந்தவரை ஏராளமாய் சிறிய தோட்டம் முதல் பெரிய பர்வதங்கள்வரை சரியான இடங்களில் முறைப்படி ஏராளமாய் பயிர் செய்வோமாகில் நாட்டின் ஆரோக்கியமும் செல்வமும் செழிக்கும்.



ஸ்ரீ தந்வந்தரயே நம:


# வைத்ய சந்த்ரிகா.

தொகுதி 9 | ஜுலை, 1947 | பகுதி 7


## 35-வது நிகிலபாரதவர்ஷீய ஆயுர்வேத மஹாஸம்மேளனம்.

1947 பிப்ரவரியில் கான்பூரில் Dr. A. லக்ஷ்மீபதி B. A. M, B. C. M. அவர்களுடைய தலைமையில் ஒருவாறு நடந்த தகரூரில் முடிந்த விஷயம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. ஆயுர்வேத உலகில் வைத்தியர்களுக்குள்ளும் தலைவர்களுக்கும் சங்கங்களுக்குள்ளும் பரஸ்பரம் வைமனஸ்யம் முற்றிப் போகக்கூடாது, ஸங்க சக்தி ஹீனமாய் க்ஷயித்து விடக்கூடாது என்று தீர்க்காலோசனையுடன் சில ஆயுர்வேத பிரமுகர்கள் கான்பூரில் நடத்த

ஆரம்பித்த அ. பா. ஆ. ஸம்மேளனத்தின் பாக்கிக் கார்யங்களை ஹரித்துவாரத்தில் நடத்தி பூர்த்தி செய்தார்கள். இந்த 35-வது ஸம்மேளனத்தில் ஏதோ சில விதிகளின் வழக்கைக் குறித்து முக்கியமாய் தகராறு செய்துகொண்டிருந்த எல்லாக் கக்ஷிக்காரர்களும் ஒரு ஐக்கிய மனதை ஹரித்துவாரத்தில் அடையும்படி செய்த பெருமை பிரதானமாய் நமது Dr. லக்ஷ்மீபதிக்கே உரியது. ஸம்மேளன கார்ய விவரம் ஜூன் மாதத்திய ஸம்மேளன பத்திரிகையில் பூர்ணமாய் வெளிவந்துள்ளது. தமிழ்நாடு ஆயுர்வேத மண்டலத்தின் பிரதிநிதியாகவும், பஞ்சபூத பரிஷத்தின் தலைவராகவும் மகாஸம்மேளனத்திற்குச் சென்றிருந்த ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரியினுடைய உபந்யாஸம் அடுத்த இதழில் ஸம்ஸ்கிருதானுபந்தமாய் சேர்க்கப்படும்.

*
* *

டாக்டர் T. S. S. ராஜன்: ஆயுர்வேத அழிவிற்குத் திரும்பவும் தனது மந்திரி பதவி பலத்தை உபயோகிக்க ஆரம்பித்துவிட்டார். சென்னையில் ஜூன் 23-ந் தேதி ஸ்ரீநிவாஸ கிளினிகல் லெபரேடரியைத் திறந்துவைக்க ஸந்தர்ப்பம் கிடைத்த தொழிலாளர் மந்திரி தான் வைத்திய இலாகா மந்திரியாயிருந்து சாதித்த விஷயங்களை பூர்வ ஜந்ம ஸ்மரணை பெற்றுக் கூறும்போது ஆயுர்வேதத்தைப் பற்றிச் செய்துள்ள தூஷணைகளில் ஒரு ஸ்வாரஸ்யம். 'Patriotism had been confounded with Ayurvedic Practice and the revival of Ayurveda had been made an issue on the political platform for SECURING VOTES because it caught the immagination of the people. (Hindu June 24.) என்று இவரே சொல்லியுள்ளார். ஓட்டு ஸம்பாதிப்பதற்கு ஆயுர்வேதத்தை உபயோகிப்பதாயிருந்தால் இவருடைய இங்கிலீஷ் வைத்திய முறைக்கு அரசாங்க ஆதரவும் ஆடம்பரமும் எவ்வளவு இருப்பினும் ஆயுர்வேதத்திலேயே பொதுமக்களுக்கு அபிமானம் ஆழ்ந்திருக்கிறதென்றும், அவ்விதம் அபிமானமிருப்பதற்கு ஆயுர்வேதத்தின் தனிச்சிறப்பே காரணமென்றும் இந்த மதி மந்திரிக்கு ஏன் புலப்படவில்லையோ?

டாக்டர் ராஜன் அவர்களுடைய பொறுப்பற்ற பேச்சைப்பற்றி நாம் அதிகம் ஆராய விரும்பவில்லை. உண்மை தேசத் தொண்டு புரியும் பாரத தேவீ தமிழ் தினப்பத்திரிகை 25-6-47-ல் தனது தலையங்கத்தில் Dr. ராஜனுடைய கூற்றுக்களை ஸகியாமல் எழுதியுள்ள பொன் வார்த்தைகளை அப்படியே இங்கு நமது சந்திரிகையில் பிரசுரம் செய்வதுடன் நிற்கிறோம்.

" மந்திரிகளின் பேச்சுக்கு உண்மையான மதிப்பு இருக்கிறதா என்பதே சந்தேகமாயிருக்கிறது என்று சில நாட்களுக்கு முன்பு

எழுதியிருந்தோம். குதிரைப்பந்தய ஒழிப்பு பற்றி 'ரெவினியூ மந்திரி ஸ்ரீ காளா வெங்கடராவ் சொன்னதற்கு நேர் விரோதமாகக் காரியங்கள் நடப்பதைப் பற்றிக் குறிப்பிடுகையில் அம்மாதிரி எழுதியிருந்தோம். இப்போது அதேமாதிரி மற்ருெரு சம்பவம் நடந்திருக்கிறது. தொழிலாளர் இலாகா மந்திரி டாக்டர் ராஜன் சென்னையில் நேற்று முன்தினம் பேசுகையில், ஆயுர்வேதவைத்தியமுறை செத்துப்போய்விட்டதென்றும், அதைக் குழிதோண்டிப் புதைத்துவிடவேண்டுமென்றும் சொன்னுர். ஏற்கனவே தான் சுகாதார மந்திரியாய் இருந்த காலத்தில் இதைப் பற்றி நன்கு பரிசீலனை செய்ததாகவும் கூறினுர். நல்ல வேளையாக இந்த மந்திரிசபையில் அவரிடம் அந்த இலாகா இல்லாதது ஆயுர்வேத சாஸ்திரத்தின் நல்லகாலம்தான். ஆயுர்வேத வைத்திய முறையின் அபிவிருத்திக்காக சர்க்கார் வருஷா வருஷம் மான்யம் கொடுக்கிருர்கள். இந்திய வைத்தியமுறையை போதிப்பதற்கென்றே சென்னையில் ஒரு கலாசாலை நடத்தப்பட்டு வருகிறது. ஆயுர்வேத முறை அபிவிருத்தியைப் பற்றி சிபார்சு செய்வதற்காக சென்னை சர்க்கார் ஒரு கமிட்டி நியமித்திருக்கிருர்கள். கிராம ஜனங்களின் சௌகரியத்திற்காக ரிஜிஸ்தர் செய்யப்பட்ட வைத்தியர்களை அனுமதிப்பது பற்றியும் சென்னை சர்க்கார் ஒரு திட்டம் வகுத்திருக்கிருர்கள். இந்த நிலைமையில் மந்திரிகளில் ஒருவர், "அது செத்துப்போய்விட்டது. அதைக் குழிதோண்டிப் புதைக்க வேண்டும்" என்று சொல்வதென்ருல் அதைப் போன்ற பொறுப்பற்ற பேச்சு வேறு ஏதாவது இருக்க முடியுமா என்று கேட்கிருேம். ஒன்று, சுகாதார இலாகாவில் என்ன செய்கிருர்களென்பது டாக்டர் ராஜனுக்குத் தெரியாமல் இருக்க வேண்டும்; அல்லது தெரிந்தே இப்படிச் சொல்லியிருக்கவேண்டும். ஆயுர்வேத முறை பிரயோசனமில்லை என்று டாக்டர் ராஜன் உண்மையிலேயே நம்புவதாய் இருக்கலாம். ஆனுல், மந்திரிகளில் ஒருவரான டாக்டர் ராஜன் மந்திரி சபை ஒப்புக்கொண்டுள்ள ஒரு விஷயத்திற்கு விரோதமாகப் பேசுவது முற்றிலும் முறை தவறிய செய்கையாகும். டாக்டர் ராஜனின் பேச்சைக் கேட்டுக்கொண்டு எல்லோரும் மேல் நாட்டு வைத்திய முறையையே நம்பிக் கொண்டிருக்க ஆரம்பித்தால் ஜனத்தொகையில் முக்கால் வாசிப்பேர் கூண்டோடு கைலாசம் போகவேண்டியதுதான். பிரசவ வசதிகளை எடுத்துக் கொள்ளுவோம். பெரிய நகரங்களில் பிரசவ ஆஸ்பத்திரிகள் இருப்பது உண்மையே. ஆனுல், இல்லாத இடங்கள் எவ்வளவு என்பதை டாக்டர் ராஜன் யோசித்துப் பார்க்கட்டும். இன்றைக்கும், நாளைக்கும் கூட லட்சக் கணக்கான கிராமவாசிகள் சுக்குத்திப்பிலி லேகியத்தைதான் நம்பிக் கொண்டிருக்கிருர்களேயொழிய, பிரசவ ஆஸ்

பத்திரிகளிலுள்ள 'ருேஷ்' 'போர்ஸெப்ஸ்' முதலியவைகளை எதிர் பார்க்கவில்லை. சுக்கையோ, மிளகையோ அரைத்துப் போட்டு தலை வலியைத் தீர்த்துக் கொள்ளுகிறார்களே யொழிய 'ஆஸ்பிரின்' எங்கிருக்கிறது என்று தேடுவதில்லை. அஜீர்ணமாயிருந்தால் 'இஞ்சி சொரஸம்' சாப்பிடுகிறார்களே யொழிய 'கார்மினேடிவ் மிக்சருக்காக' டாக்டரிடம் ஓடுவதில்லை. தனக்குத் தெரிந்த வைத்திய முறையைப் பற்றி டாக்டர் ராஜன் பெருமையாய்ப் பேசுவதை யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். ஆனால் இதர முறைகளைப் பற்றி அவர் தனது 'திடமான அபிப்பிராயங்களை'த் தெரிவிக்கும் போது அதுதான் சர்க்காரின் அபிப்பிராயமும் என்று நாம் கேட்பதில் தவறில்லை யென்றே நினைக்கிறோம். சென்னையில் நடத்தப்படும் கலாசாலைக்குச் செலவிடப்படும் பணம் வெறும் தண்டமா? கிராமவைத்தியர்கள் திட்டம் வெறும் தமாஷா? ஆயுர்வேத விசாரணைக்கமிட்டி வெறும் கண் துடைப்பா? சர்க்கார் இதற்கு பதில் சொல்லவேண்டும். அத்துடன் தமக்கு சம்பந்தமில்லாத இலாகாக்களைப் பற்றி மந்திரிகள் பொறுப்பற்ற முறையில் பேசுவதும் நிற்கவேண்டும்.''

---

# ஆராய்ச்சி எங்ஙனம்?

[ஸ்ரீ. Dr. K. ராகவய்யர், L. I. M.]

(1947 ஜூன் இதழின் தொடர்ச்சி)

6. **விசேஷத் தேர்ச்சியும் கல்வியும்** :— சல்யம், சாலாக்யம், சுகதம், கௌமார பிருத்யம் முதலிய ஆயுர்வேதாங்கங்களிலும்; ஸ்நேஹ, ஸ்வேத, வஸ்தி, க்ஷாராக்னி கர்மா, அஸ்தி சந்தானம் முதலிய ப்ரத்யேகச் சிகிச்சா முறைகளிலும்; குஷ்டம், க்ஷயம், சர்மரோகம், வல்மீகம் போன்ற விசேஷ ரோகங்களிலும், ஸ்த்ரீ ரோகங்கள், யோனி ரோகங்கள், மனோ ரோகங்கள், போன்ற தனிப்பட்ட விகார சமூகங்களிலும், இன்னும் பலவிதமாகத் தனித்தனியே யுள்ளவற்றிலும் ப்ரத்யேகப் பயிற்சியும், விசேஷத் தேற்சியும், யோக்யதையும் அபூர்வமான கல்வி யபிவிருத்தியும் உண்டாகுமாறு ஏற்பாடுகளும் சௌகரியங்களும் அமைத்து அவ்வித விசேஷத் தேற்சியும் பயிற்சியும் நடைமுறையில் கொண்டு வரவேண்டும்.

7. ரோக, ரோகி, சிகிச்சைகளுக்கு ஏற்ற கருவி உபகரணங்கள்:— தற்காலம் அந்தந்த ரோகிகளுக்கு ஏற்றனவும், பற்பலவித ரோகாவஸ்தைகளுக்குத் தகுந்தவாறும் அநேகவிதமான சாதனங்களுண்டு. படுக்கைகள், தலையணைகள், கொசுவலைகள், மெத்தை, உட்காரவும், சாய்ந்துகொள்ளவும் ஆசனங்கள், Water bags, Ice packs, bed pans, Trusses, bandages, plasters, creetches, splints, urine bottles, spittovons, apparatus for douching, origating, washing, fastinigating, inhaling, aspiration etc., இன்னும் பற்பல உபயோகங்களுக்கு ஏற்ற கோப்பைகள், stretchers, wheeled cots & carts, invalid chairs. முதலிய அநேகவிதமான ரோகிக்குச் சுகமும் சௌகரியமும் உண்டாக்கக் கூடியவையும் ரோகத்திற்குச் சாந்தியாகவும் ஆன எண்ணிலாச் சாதனங்களை நாமும் உபயோகிக்க அப்யாசம் பண்ணிக்கொள்ளவேண்டும். இன்னும் சௌகரியத்தையும், சுகப்பிரயோகத்தையும் லக்ஷ்யமாக்கியும், ரோகானுசாரமாக Precision, Accuracy standardisation இவைகளை யொட்டியும் மேல்நாட்டார்களாலும் இதரர்களாலும் வழங்கப்பட்ட கருவிகளையும் பரீக்ஷித்துப் பார்த்துத் தக்கபடி ஆயுர்வேதாப்பியாசத்திலும் உதவுமாறு முயலவேண்டும்.

8. சுவஸ்த ரோகிகளின் உணவு, பத்தியாபத்தியம் முதலியன (*Dietetics & Dietary*):— ஆரோக்கியத்திற்குக் குறைவு ஏற்படாமலும் மனிதனின் வயது, வளர்ச்சி, தொழில், வாசஸ்தலம் முதலியவற்றிற்குத் தக்கவாறும் உணவுகளையும், உணவுப் பொருள்களையும் ஆராய்ந்து அவைகளை யுபயோகிக்கும் விதிவிலக்குகளுடனும் அணி வகுத்துக் காட்டவேண்டும். ரோக ரோகிகளுக்குத் தகுந்தவண்ணம் உணவு, பானம் முதலியவைகளைப் பத்தியா பத்திய விவரங்களுடன் விஸ்தரிக்க வேண்டும். மண்டம், பேயா, விலேபீ, ஓதனம், யவாகு, தர்ப்பணம் கலம, ரஸம், சாகம், முதலிய பக்வான்ன வியஞ்சன பேதங்களையும் அவைகளைச் சுலபமாய்த் தயாரிக்கும் வழிகளையும் எடுத்துரைக்கவேண்டும். தற்சமயம் கிடைக்கும் பழங்

கள், பால், முதலியவைகள், வனஸ்பதி முதலிய நெய்ப்புப பண்டங்கள் இவைகளின் பிரயோஜனமும் நிஷேதமும், மேலும், Bread, biscuits, rusks, pasties pies, Jams, Jellies, Malts, foreign liquors & wines முதலியன நவீன பக்ஷண பாஞதிகளின் குண தோஷங்களையும் அறிந்து எடுத்துரைத்தல் வேண்டும்.

9. **வைத்திய விஷயங்களைப் பதிவு செய்தலும் தொகுத்தலும்** *(Recording & Medical statistics)* :— வைத்தியானுபவங்களையும், சிகிச்சை முதலியவைகளில் ஏற்படும் உண்மைகள், அனுபவங்கள் ஆகியவற்றையும் தனித்தனியே பதிவு பண்ணி முடிவில் பலவிதமாகத் தயாரித்த பதிவுகளை சரிவரத் தொகுதிகளாக்கி கிரந்த, சாஸ்திர, கலை இவைகளுக்குப் பிரயோஜனப்படுமாறு அமைக்க வேண்டும். இதற்காகச் சாமான்யமாயும், விசேஷமாயும், பிரத்யேகமாயும், சகலத்தையும் தழுவினதாயும் உள்ள பாரம் (Forms etc.,) முதலியவைகளைத் தயாரித்து அதன்படி அனைவரும் பதிவு பண்ணவும், விஷயங்களைத் திரட்டித் தொகுக்கவும் ஏற்பாடுகள் செய்யவேண்டும். இந்த பாகம் மிகவும் அவசியமானது. இதின் மூலமே ஏனைய சாஸ்திராபிவிருத்தியும் வைத்தியக்கலை வளர்ச்சியும் ஏற்பட வேண்டும். இந்த விஷயமாய்த்தானே மேல்நாட்டாரும் நவீன விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களும் தீவிரமாகவும், மகத்தானதும் ஆன மாபெரும் காரியங்களைச் சாதித்து வந்திருக்கிறுர்கள். ஆனால் அவர்களின் வழிகள் பூராவுமே உண்மையைச் சாதிக்கக் கூடியதும், பூரணப் பிரயோஜனப் படுவனவும் அல்ல. ஆனால் அவர்கள் செல்லும் மார்க்கமும், அனுஷ்டிக்கும் முறைகளும் பாராட்டத் தக்கனவும், கவனிக்கத் தக்கனவும் ஆகும்.

இப்படியே இன்னும் பல பாகங்களாகப் பிரித்து ஆராய்ச்சிகளை நடத்தலாம். மேற்கூறியவண்ணம் ஒவ்வொரு பாகத்தின் பொறுப்புகளையும் ஓர் நபர் வகித்து அவர் மூலம் மற்ற ஏனையோர்களின் கூட்டுறவுச் சகாயத்தின்பேரிலும் ஆராய்ச்சியைத் தற்சமயம் நம்மாலியன்ற

வரை நடத்தி வரவேண்டும். இப்படி ஒவ்வொரு கிளையிலும் நடந்தேறிய ஆராய்ச்சி சித்தாந்தங்களை ஒன்று சேமித்து சம்பூர்ணமான ஆயுர்வேதசாஸ்திரமும், ஆயுர்வேத தர்சனமும் ஜனிக்க ஏற்பாடுகள் செய்துகொள்ள வேண்டும்.

*குறிப்பு :— மேற்கண்டவாறு ஏகமனதாய்த் தீர்மானம் பண்ணி வந்திருந்த நபர்கள் தங்கள் தங்களுக்குச் சாத்தியமானதும், பொருத்தமானதும் ஆன ப்ரத்யேகக் கிளை நிர்வாகப் பொறுப்பைஏற்றுக்கொண்ட விவரம் 1947, மே இதழ் 94-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.* —**ஆசிரியர்.**

# குழந்தைகளின் ஈரல் குலைப்பெருக்கம் (கட்டி வியாதி)

## शिशूनां यकृत्प्लीहोदर रोगः ।

*[ ஸ்ரீ L. ராஜாவய்யர், மன்னார்குடி. ]*

*(சென்ற இதழ் 133-ம பக்கம் தொடர்ச்சி)*

**அஸாத்ய நிலை.**

ரத்தத்திலும் நீரிலும் உப்புகள் ஜாஸ்தி இருப்பதால் ஈரல், பிலீஹம், விருக்கங்கள் வேக்காளம் அடைந்து அவைகளில் தொழில் மந்தப் பட்டு நீரே ரத்தமாகவும் மிகவும் குறைந்தும் இறங்கும் யகிருத், பிலீஹம் ஜாஸ்தி வீங்கிவிடுவதால் விக்ருகங்கள் நன்கு அமுத்தப்பட்டு சில தினங்களில் நீரே இறங்காமல் வயிற்றிலேயே தங்கி வயிறு பிரம்மாண்டமாய் வீங்கி ஸிரைகள் பிதுங்கி வெளிக் கிளம்பி வயிற்றின் மேல் படர்ந்த விதமாய் காணப்படுகிறது. இது ஜலோதரம் எனப்படும். மலபந்தமோ, அதிகப் போக்கோ ஏற்படும். முகம், தேகம் பூராவும் நல்ல மஞ்சள் பரவும். குடல், வ்ருக்கங்கள் வேக்காளத்தினால் நீர், மலம் முதலியவை வெறுப்பான நாற்றத்துடன் வெளிப்படுகிறது. தேகம் பூராவும் வீக்கம் காணும் யகிருத்ப்லீஹ வீக்கத்தால் புப்புஸங்கள் அமுத்தப்பட்டு கஷ்ட-

ச்வாஸம் ஏற்படும் பித்த தோஷத்தினால் ஸதா மயக்க முற்று உட்கார பிரக்ஞை யற்றுக் கிடக்கும்.

இந்நிலையில் சில குழந்தைகளுக்கு இரவில் விளக்கின் வெளிச்சத்திலும் கண் தெரியாமலிருப்பதுண்டு. இது த்ருஷ்டிக்குக் காரண பூதமான பித்தம் தோஷமடைவதால் ஏற்படுகிறது. வேக்காளத்தினால் மூத்திர பிண்டதாபன ரோகம் ஏற்படுகிறது. நீரே இறங்காமல் முகம் சற்று நேரத்திற்கு ஒருமுறை பயங்கர சப்தம் இவை உண்டாகி சில சமயங்களில் புத்தி பேதித்து கையைக் கடித்துக்கொள்ளுவதுண்டு பிறகு சுவாஸம் கண்டு கை கால்கள் அசைவற்று நாபியிலிருந்து மூச்சும், அதிவேர்வை, உடல் ஜில்லிப்பு இவை உண்டாகும். ஈரல் பிலீஹத்தின் இரத்தக் குழாய்கள் அழலையினாலும் வீக்கத்தினாலும் ரத்த ஓட்டம் தடைபட்டு அந்த ரத்தம் குழாய்களிலிருந்து வெளிப்பட்டு பித்தக் குழாய் வழியாய் குடலில் விழுந்து மூக்கின் வழியாயும் ஆசனத்தின் வழியாயும் வெளிப்படும். இப்படி ஏற்பட்ட 2 நிமிஷங்கள் முன்போ, பின்போ மரணம் ஸம்பவிக்கிறது. இரத்தம் வெளிப்பட்டு விடுவதால் ஈரல் ப்லீஹம் கொஞ்சம் மிருதுவடைகிறது. ஆகையால் இந்தக் கொடிய வியாதியை ஆரம்பத்திலேயே கவனித்து சிகித்ஸைக்கு வசப்படுத்த வேண்டும்.

**யகிருத்— ப்லீஹத்தை பரீக்ஷிக்கும் விதம்.**

குழந்தைக்கு பேதிக்குக் கொடுத்து மல பந்த மில்லாமல் செய்து ஆஹாரம் கொடுக்கும் முன் குழந்தையை படுக்கவைத்து விலா எலும்புக்குக் கீழ் அழுத்திப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும் பொழுது கைக்கு வலது விலா எலும்புக்குக் கீழ் பனம் நொங்கைப்போல் தென்பட்டால் யகிருத் வீக்கம் என்றும் இடது பக்கம் தென்பட்டால் பிலீஹ வீக்கம் என்றும் அறியவேண்டும்.

இந்த வியாதியை ஆரம்பத்திலேயே கவனித்து இந்த வியாதியில் அனுபவமுள்ளவர்களிடம் குழந்தையை நேரில் காட்டி சிகித்ஸை பெறவேண்டும்.

**சிகித்ஸை:**

பூர்வ ரூபத்தில் சொல்லப்பட்ட குணங்கள் கண்டவுடன் குழந்தைக்கு ஜீர்ணம் சரிவர இருக்கும்படி செய்ய வேண்டியது. சிறிய அளவில் ஹிங்குவாஷ்டகசூர்ணம் இந்நிலையில் குணம் தருகிறது.

**சுகசாத்ய நிலையில் :**

இந்த வியாதிக்கென்று பிரபலமாயும் அனுபவமாயுமுள்ள ஏதாவது ஒரு மருந்தைக் கொடுத்துவர குணமடையும். சிலாஜத், வெங்காரம், மான் கொம்பு, மரமஞ்சள், புனர்னவா— முதலியவைகளைக் கொண்டு தயார் செய்யப்பட்ட பஸ்மம் முறைப்படி உபயோகிக்க குணமளிக்கிறது.

பேதிக்குக் கொடுக்க ஆமணக்கு எண்ணையுடன் த்ருபலாகஷாயம் சேர்த்து 10 தினங்களுக்கு ஒரு முறை மலபந்தம் இல்லாமல் லகு விரேசனம் செய்து வைப்பது உத்தமம்.

கட்டிக் குழந்தைகளுக்கு பார்லி கஞ்சி, பால் இவைதான் உத்தம ஆகாரம். சாத்துக்குடி, ஆரஞ்சு, திராக்ஷை இவைகளும் கொடுக்கலாம்.

**க்ரம சாத்ய நிலையில் :**

வீக்கம், காமாலை ஏற்படுவதால் அதற்கு த்ருபுடபுனர்னவகாந்தமண்டூரம் கொடுக்கப்பட்டால் குணம் தருகிறது. இத்துடன் புனர்னவாதிகஷாயமும் கொடுப்பது உத்தமம்.

**மூக்கில் ரத்தம் வந்தால் :**

மூக்கின் மேல் ஈரத்துணியைப் போட்டு ஒரு பைசா எடை விரளி மஞ்சள் தூளுடன் சிலாஜது பஸ்பம் 1 குன்றி எடை சேர்த்து பசும் நெய்யில் கொடுக்க குணமடையும்.

**வாந்தி எடுத்தால் :**

பர்பாடக கஷாயம் அரை அவுன்ஸ் தினம் காலையில் 3 தினங்கள் கொடுக்க குணமடையும்.

அசாத்ய நிலையில் :

வயிற்றில் சேர்ந்திருக்கும் நீரை குத்தி எடுத்து பிறகு மேற்படி சிகித்ஸை செய்ய ஒரு வேளை குழந்தை பிழைக்கலாம். ஆனால் மறுபடியும் வயிற்றில் நீர் சேர்ந்தால் குழந்தை சிகித்ஸைக்கு அதீதமானதே.

ஈரல், குலைக் கட்டி வராமல் தடுப்பதற்கு:

1. பெற்றோர்கள் நோயற்றுத் திட காத்ரராய் வாழ வேண்டும்.

2. தாய்மார்கள் கெர்பத்தில் வியாதி, பல ஹீனம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கெர்ப காலத்திலும் பிரஸவமான பிறகும் பூண்டு சேர்த்தால் அந்தத் தாயின் குழக்தைக்கு ஈரல் குலைக் கட்டி ஏற்படுவதில்லை. தாய் காப்பி, டீ, புகையிலை இவைகளை நீக்க வேண்டும். குழந்தைகளுக்கும் டீ, காப்பி இவை கொடுக்கலாகாது.

3. தாயார் பிரஸவமானவுடன் வாத பித்தங்கள் தோழமடையாமல் இருக்கவும் ரத்த விருத்தி, ஜீர்ணசக்தி குறைவில்லாமலிருக்கவும் ஸ்தன்ய விருத்தியின் பொருட்டும் நம் நாட்டு மருந்துகளை உபயோகிக்க வேண்டும்.

4. குழந்தை தாய்ப்பால் நிறுத்தும் வரை (சுமார் $1\frac{1}{2}$ வயது வரை) தாய் ப்ரம்மசர்யம் அனுஷ்டிக்க வேண்டும்.

5. தாய்ப்பால் இல்லாத குழந்தைகளுக்குக் குழந்தையின் ப்ரகிருதிக்குச் சமானமான தாதியை நியமித்துப் பால் கொடுக்கவேண்டும். அதற்கு வசதி இல்லாவிட்டால் பசும்பாலே மேலானது.

6. குழந்தைக்கு மலபந்தம் இல்லாமலும், ஜீர்ணம் கெடாமலும், பலஹீனம் உண்டாகாமலும் கிரமமாய் அடிக்கடி லகு விரேசனம் செய்து வைக்கவேண்டும்.

7. குழந்தைகள் ஜீர்ணம் விருத்தியாவதின் பொருட்டு உறை மருந்து போட்டவேண்டும்.

8. குழந்தைகளுக்கு நடைவண்டியைக் கொண்டு தேஹப் பயிற்சி கொடுக்கலாம். தினம் வென்னீர் ஸ்நானம் செய்து வைக்கலாம்.

9. குழந்தைக்கு ஒரு வயதிற்கு உட்பட்டு சாதம் கொடுக்கக் கூடாது.

10. குழந்தைகளுக்கு உண்டாகும் ஜ்வரம் சீத பேதி முதலிய வியாதிகளை உடனே கவனித்து சிகித்ஸை செய்ய வேண்டும். வயிற்றில் கோளாறின் சந்தேகமேற்பட்டால் உடனே வைத்தியரிடம் பரீக்ஷிக்க வேண்டும்.

11. சில குடும்பங்களில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஈரல் ப்லீஹ வியாதி உண்டாகிறது. அப்படி இருந்தால் பெற்றோர்கள் வைத்தியரை அணுகி எக்காரணத்தினால் அந்த வியாதி உண்டாகிறது என்று தெரிந்து கொண்டு உடனே சிகித்ஸை செய்து கொண்டால் பிறக்கும் மற்ற குழந்தைகளுக்கு இந்த வியாதி வராமல் தடுக்கலாம்.

12. குழந்தைகள் மண், சாம்பல் தின்னாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். 15-நாட்களுக்கு ஒரு முறை முள்ளங்கிச் சாறுவது, பூண்டு பாலில் அரைத்து கொதிக்க வைத்து வடிக்கட்டியாவது கொடுத்து வந்தால் குடல் கோளாறுகளின்றி இருக்கும். ஆமணக்கு எண்ணையும் த்ரிபலா கஷாயத்துடன் அடிக்கடி குழந்தைகளுக்குக் கொடுக்க இந்த வியாதி ஏற்படாது.

மேற்கண்ட சில விதிகளை அனுஸரித்தால் நமது தேசத்தில் யகிருத் பிலீஹ வீக்கத்தினால் பீடிக்கப்படும் குழந்தைகளின் சங்கியை குறைந்து குழந்தைகளின் ஆரோக்கிய நிலை உயர்ந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

---

வாசக நேயர்களே!

தாங்கள் ஒவ்வொருவரும் பல புதிய வைத்தியர்களையும், பொதுஜனங்களையும் மண்டலத்தின் அங்கத்தினர்களாக்கும்படி முயற்சி செய்யப் பிரார்த்திக்கப் படுகிறது. தங்களுடைய 1947 வருஷச் சந்தாவையாகிலும் இதுவரை அநுப்பாதிருந்தால் தயை செய்து உடனே M. O. மூலம் அநுப்பிவிடவும்.

# நமது தபால்பெட்டி.

## வினு — விடைகள்.

1947, மே. சஞ்சிகையில் வெளியான வினுக்களுக்குக் கிடைத்துள்ள விடைகள்:— (முதலில் வினுக்களை படித்துப் பார்த்துக் கொள்ளவும்.)

***ஆராய்ச்சி அணிகலம் ஸ்ரீ R. ரங்கநாதம் விளக்குகிறார்:—***

1. **உப்புச்சுண்ணம்** செய்ய எடுத்துக் கொள்ள வேண்டியது கொடிக்கள்ளிக் கட்டையே. சுமார் ஒரு **மு**ழம் நீளம் கால் **முழம்** அகலம் வாய்ந்த அடிமரக் கட்டையை உள் குடைந்து, கால் படி உப்பைக் கொட்டி மூடி, சீலை 7 செய்து கஜபுடமிட சுண்ணமாகும்.

2. அப்பிரக **பஸ்மம்** முதற்புடத்தில் மங்கலான வெண்மை நிறத்துடன் தளுக்குடன் கூடியதான பஸ்மமுண்டாகும். பின்னர் ரஸம் சேர்த்து தளுக்கு மடியும் வரை அரைத்து, மந்தாக்னியான உலையில் துருத்தியால் ஊதவும். அரை முதல் முக்கால் மணியில் பக்குவமாகும். மூசை அணுகும் பக்குவம்— பிடிகரண்டியில் பிடிக்கும் பொழுது நசுங்கும். அதை எடுத்து மறுநாள் வரை ஆறவைத்து எடுத்துப்பார்க்க தளுக்கற்ற நிலையிலிருந்தால் சுத்தமானது. தளுக்கிருந்தால் மறுபடி அதே சார்விட்டரைத்து புடமிடவும். தூயவெள்ளையான பற்பமாகும். அளவு 1 அரிசி யிடை. மூத்திர கிருச்சிரம், நீரழிவு, மற்றும் மூத்திரக் குண்டிக்காய் சம்பந்தமான ரோகங்கள் போகும். அநுபானம் வெண்ணை.

***ஸ்ரீ K. P. P. கேட்டுள்ள பிரதர சிகித்ஸை:***

Dr. R. K. *பழனியப்பா*, H. L. M. S. **சேலம் எழுதுகிறார்.**

1. பூங்காவியை, தகுந்த அளவு இளநீர் விட்டு கரைத்து வடிகட்டிய தெளிவை உலர்த்தி அத்தூள் ஒரு பங்கும் பொரித்த சீனக்காரம் அல்லது சீன பற்பம் ஒரு பங்கும் சேர்த்து 3 மணி நேரமரைத்து அதில் வேளை 1க்கு குன்றி யளவு முதல் 3 குன்றி வரை பசு வெண்ணெயில் 5 தினம் கொடுக்க பூரண குணங் கொடுக்கும். (தினம் 2 அல்லது 3 வேளை) பல Allopathic முறை வைத்தியர்களால் இஞ்செக்ஷன் முதலிய Treatment கொடுத்தும் குணமாகாத கேசுகளில் கொடுத்து குணம் கண்டுள்ளேன். அவசியம் நிவர்த்திக்கும்.

**2. ஹோமியோபதி பிரிவு பயோ கெமிஸ்ட்ரி முறை.**

கல்கேரியா ப்ளோரிகா Calcarea Flourica.

கல்கேரியா பாஸ்பரிகா— Calcarea Phosphorica.

இவை இரண்டையும் மாற்றி ஒருமணிக்கு ஒரு தடவை அல்லது அரை மணிக்கு 1 தடவை கூட 6× வீரியத்தில் தடவைக்கு 5 கிரெயின் வீதம் மூன்று நாளும் பின்னர் 30 வீரியத்தில் சில நாளும் கொடுக்க கண்டிப்பாய் நிவர்த்திக்கும். எம்முறையில் தவறினாலும் இதில் தவருது குணங் கொடுக்கும். Abortion, (கெர்ப்பச் சிதைவு) ஏற்படுமென்ற பயத்துடன் உண்டாகும் இரத்தப் பெருக்கையும் நிவர்த்திக்கும். பல கேசுகளில் கொடுத்து குணங் கண்டது. மேலே கண்டபடி சில நாள் உபயோகித்தபின் Calcarea phosphorica வை மட்டும் நீடித்து கொடுக்க திரேகம் பலப்படும். இது சிறந்த டானிக்காக உபயோகிக்கலாம், இதுதான் Calcium, Phosplate of Lime, இவை கிடைக்குமிடம்:—

1. H. P. Dispensary, Kankanady (Mangalore).
2. Indian Homoeopathic Stores, Bow Bazaar, Calcutta.

**2. Dr. T. G. R. அய்யர் F.A.I.M. R.M.P. ஈரோடு, எழுதுகிறார்.**

சித்த வைத்திய சிகிச்சை முறை அனுபோகத்தில் நான் கையாண்டுவருவது, யாவரும் செய்து பிரயோஜனமடையுமாறு இங்கு விவரித்திருக்கிறேன். எவ்வித சிகிச்சையிலும் கட்டுப்படாத பெரும்பாடு இவ்விருவித மருந்துகளுக்கு அவசியம் குணமடையும்.

**1. பூங்காவி சிந்தூரம்:**

படிக்காரம் பலம் கால், பூங்காவி பலம் 1.
(சித்த வைத்திய பலம் 3 தோலா)

இவை யிரண்டையும் கல்வத்திட்டு மிருதுவாக அரைத்து ஒரு சிறு மண்குடுவையில் போட்டு வாய்மூடி சீலேசெய்து கரி நெருப்பனலிலாவது சிறு தீயிலாவது கால்மணிநேரம் வைத்தெடுத்து ஆறவிட்டு மீண்டும் கல்வத்திலிட்டு அறைத்து சீசாவில் பத்திரப் படுத்தவும். வேளைக்கு பணவிடை வீதம் தினம் இருவேளை நெய், வெண்ணை இவைகளில் உட்கொள்ளவும். பத்தியமில்லை.

**2. அயக்கருப்பு:**

ஒரு பீங்கானில் கருவேலங் காய், முற்றாத பக்குவத்தில், இடித்து சாறு பிழிந்து அதில் நயமான அயத்தூளைப் போட்டு 5, 6 மாதம் வரை துப்பாகும்படி விட்டுவிடவும். பின் அப்படியே கல்வத்திலிட்டு நன்றாயரைத்து மெல்லிய சீலையில் வஸ்த்ரகாயம் செய்து சீசாவிலிடவும். இது சுத்த கருப்பாக இருக்கும்.

இதனை தேன், நெய் முதலிய அநுபானங்களில் குன்றியளவு தினம் இருவேளை 3 நாள் கொடுக்க எத்தகைய கடூரமான பெரும்பாடாயினும் குணமாகும். பத்தியம் புளி தள்ளவும்.

**3. வைத்திய விசாரத, Dr. P. S. A. சர்மா A. V. A. C. பொள்ளாச்சி எழுதுகிறார்.**

எனது அனுபவ பூர்ணமான சிகித்ஸா கிரமம்;—

**"அசோக கிருதம்"** இதை காலை, மாலை வெறும் வயிற்றில் அரை முதல் 1 அவுன்ஸ் வரையிலும், 10 தான்ய எடை (10 Grains) "குடூசி ஸத்வம்" சேர்த்து சாப்பிட்டு அதற்கு மேல் கொஞ்சம் தாரோஷ்ணமான பசும்பால் சாப்பிடவும். சாப்பிட்டதற்கு மேல் அதாவது மத்தியானம் இரவு "சதாவரீ குளம்" சாப்பிட்டு அதற்குமேல் கொஞ்சம் காய்ச்சிய பசும்பால் சாப்பிடவும். உடம்பிற்கு **"பிண்டதைலம்"** தேய்த்து விசேஷமாக கர்பாசய பிரதேசம், கடிபிரதேசங்கள் இவைகளில் சிறிது காலம் நன்ருகத் தேய்த்து சிறிது காலம் ஊறவிட்டு கடலைமாவு அல்லது பாசிப்பருப்பு மாவு தேய்த்து அதிக சூடு இல்லாமல் வென்னீர் விட்டு ஸ்நானம் செய்யவும். உடம்புக்கு தைலம் தேய்க்கும் போது தேய்ப்பதற்கு முன்னுடி தலையில் கொஞ்சம் காய்ச்சிய நல்லெண்ணை தேய்க்க வேண்டும்.

பத்திய க்ரமம்:

காபி, தேயிலைப்பானம், மிளகாய் காரம், புளி, மொச்சைக் கொட்டை, கடலை, உருளைக்கிழங்கு, மொந்தன் வாழைக்காய், மொட்டைக்கோஸ் இவைகளைக் கண்டிப்பாய் நீக்கவேண்டும். இவைகள் ஸ்தானத்தில் குருமிளகு, எலுமிச்சம்பழம் இவைகள் சேர்க்கலாம்.

இந்த முறை என்னுடைய அனுபவ பூர்வமானது. இதை குறைந்தது 3 மாத காலங்கள் சீலிக்கவேண்டும், இதில் தீராவிட்டால் மலையாள வைத்யம் போன்ற 'பிழிச்சல்' செய்தாகவேண்டும்.

* * *

1947 ஜூன் சஞ்சிகை— கீல் வாய்வு யோகத்தில் சேர்க்கவேண்டிய கத்தாழை 'சோற்றுக் கத்தாழை' தான் என்று அந்த யோகமெழுதிய சோபனபுரம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் தெரிவித்துள்ளார்.

* * *

**ஆசிரியர் குறிப்பு:—** 1947 மே இதழில் வெளியான ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரிகளால் அறிய விரும்பப்படும் மான பரிபாஷை விஷயமான ஸந்தேஹங்கள் எளிதில் தீர்க்கக் கூடியவை அல்ல. பிராசீன மூலக் கிரந்தங்களிலும், வியாக்கியானங்களிலும், தேசத்திற்கு தேசம் விருத்த வைத்திய ஸம்பிரதாயங்களிலும் மான பரிபாஷையில் நாநாப் பிரகாரமான மதபேதங்கள் தொண்டு தொட்டு இருக்கின்றன. எல்லா மதங்களையும் ஆராய்ந்து, பரீக்ஷை செய்து பார்த்து ஒரு புதிய மானபரிபாஷை அமைக்கவேண்டியது பரம

வசியம். உலகம் முற்றிலும் வியாபகமாய் அமைக்க முடியாவிடினும் இந்தியா தேசத்தில் வைத்திய உலகம் முற்றிலுமாகிலும் வியாபகமாய் அநுஸரிக்கத் தக்கதான மான பரிபாஷையும் மான பாண்டங்களும் கூட தயாரிக்க வேண்டும். கணிதசாஸதிரத்திலும் ஆயுர்வேதத்திலும் தேர்ச்சி பெற்ற சில பண்டிதர்கள் சேர்ந்து விமர்சித்து தீர்மானம் செய்யவேண்டிய கார்யம். தகுந்த யோக்கியதையுள்ள பண்டிதர்கள் இல்லையென்று சொல்லுவதற்கில்லை. பண்டிதர்கள் தயை செய்து ஒரு ஸமிதியாகக் கூடி மான பரிபாஷை தீர்மானம் செய்ய வேண்டும். இதில் ஊக்கமெடுத்துக் கார்யம் செய்ய விரும்பும் வித்வான்கள் தங்கள் அபிப்பிராயத்தையும் உபாயங்களையும் சந்திரிகை ஆசிரியருக்கு எழுதப் பிரார்த்திக்கப்படுகிறார்கள்.

---

## செய்திக் குறிப்புகள் :

### சென்னை மாகாண ஆயுர்வேத ஸபா, மதராஸ்.

ஷை ஸபா அங்கத்தினர்களால் சென்னை மாகாணம் கனம் சுகாதார மந்த்ரீ அவர்களிடம் சமர்ப்பிக்கப் பட்ட விண்ணப்பம்.

சென்னை மாகாண ஆயுர்வேத ஸபாவின் அத்யக்ஷர் ஸ்ரீமான் K. பால சுப்ரம்மண்ய அய்யர், ஸ்ரீமான்கள் K. K. பட், C. M. சிவ சுப்ரமண்ய அய்யர், C. S. நாராயண தீக்ஷிதர் இவர்கள் அடங்கிய தூது கோஷ்டியினர் சென்னை மாகாண சுகாதார மந்த்ரீ கனம் A. B. ஷெட்டி அவர்களை 3-6-47ல் ஸந்தித்து ஒரு மஹஜரை ஸமர்ப்பித்தனர்,

அம் மஹஜரில் தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், கர்நாடகம் இந்த நான்கு பிராந்தீயங்களிலும் நான்கு ஆயுர்வேதக் கல்லூரிகளை ஏற்படுத்த வேண்டுமென்றும், சென்னையில் ஆரம்பமாகவிருக்கும் ஆயுர்வேதக் கல்லூரியில், சமீபத்தில் சென்னை சர்க்காரால் நியமிக்கப் பட்ட Board of Studies ஆல் தயாரிக்கப் பட்ட Syllabus பிரகாரம் தக்க படி போதனை செய்ய வேண்டுமெனவும் அதற்கான தேர்ந்தவர்களும் யோக்கியதை உள்ளவர்களுமான ஆயுர்வேத வைத்தியர்கள் கல்லூரியில் உபாத்தியாயர்களாக அமைக்க வேண்டு மென்றும், தற்போது இம் மாகாணத்திலிருக்கும் ஆயுர்வேத ஸ்தாபனங்களுக்கு தாராளமாக மான்யம் (grant) அளிக்கப் படவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப் பட்டது.

தவிரவும் இந்திய வைத்தியர்களின் பதிவு விஷயத்தில் ஸமீபத்தில் 'A' 'B' என்ற இரு பிரிவினைகளையும் அகற்றி ஒன்றாகச்

செய்ததை மறுபடியும் புனராலோசனைக்குக் கொண்டுவரக் கூடா தென்பதாகவும் இத்தூதுகோஷ்டியினர் கேட்டுக் கொண்டனர்.

கனம் சுகாதார மந்த்ரீ அவர்கள் நன்கு கேட்ட பின்னர் மஹஜரில் கண்டுள்ள விஷயங்களை சீக்கிரமே கவனிப்பதாகவும் வாக்களித்தார்-என்று கார்யதர்சீ ஸ்ரீ சிவசுப்ரமணியம் அறிவிக்கிறார்.

இந்திய வைத்திய ஸெண்ட்ரல் போர்டு. ஷை போர்டில் L. I. M. களுக்கு அதிக ஸ்தானம் கொடுப்பதற்காக போர்டுமெம்பர்களின் மொத்த சங்கியை 25 லிருந்து 26 ஆக உயர்த்தப் பட்டும் கவர்ன்மெண்டாரால் நியமனம் செய்யப்படுவதாக ஒதுக்கப் பட்ட மெம்பர்களின் சங்கியை 2லிருந்து 1 ஆகக் குறைக்கப்படும். ஆகவே அதிகமாய் கிடைக்கக் கூடிய 2 ஸ்தானங்கள் L. I. M, களுக்கே கொடுக்கப்பட்டு L. I. M. களுக்கு ஏற்கெனவே இருந்த ஸ்தானங்கள் 2லிருந்து 4 ஆக அதிகமாக்கப் படும் என்று ஒரு சர்க்கார் அறிக்கை கூறுகிறது. Hindu, June 20

சென்னைமாகாண ரிஜிஸ்டர்டு மெடிகல் ப்ராக்டிஷனர்களின் சங்கம் தென்னுலியில் கூடி செய்த தீர்மானத்தின் சுருக்கம்—சென்னை அரசாங்கத்தார் இந்தியவைத்தியத்தின் அபிவிருத்தித்துறைகளில் செய்ய உத்தேசித்துள்ள வழிகளைப் பாராட்டிவிட்டு மேற்கொண்டும் அரசாங்கத்தாருக்கு அபிவிருத்தி வழிகளை எடுத்துக் கூற Dr. A. லக்ஷ்மீபதி, Prof. D. ரங்காசாரி, Capt. ஸ்ரீநிவாஸ மூர்த்தி முதலிய 9 வைத்தியர்களடங்கிய ஒரு கமிட்டி நியமனம் செய்யப்பட்டது. இதுவரையிலும் ரிஜிஸ்டர் செய்துகொள்ளாமலிருக்கும் தேசீய வைத்தியர்களை ரிஜிஸ்டர் செய்து கொள்ளவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படிக்கு இந்திய வைத்திய ஸென்டிரல் போர்ட்டை கேட்டுக் கொள்ளுகிறது. — Hindu. 9—6—47.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் ஸ்தாயி ஸமிதி 28-6-47:ல் திருச்சியில் கூடியதில் கனம் மந்திரி டாக்டர் ராஜன் ஆயுர்வேதத்தை இழிவாகப் பேசியதைக் கண்டித்தும், ஆயுர்வேத விஷயமாகக் கேட்டிருக்கும் கேழ்வைகளுக்குப் பதில் அளிக்க அவகாசம் கொடுக்கும்படி மத்ய கவர்ன்மெண்டைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேறின.

---

அநேக விஷயங்கள் நிரம்பிய வைத்திய சந்திரிகை பழைய சஞ்சிகைகள். குறைந்த விலை. 12 மாத சஞ்சிகைகள் ரூ. 2–4–0. வைத்திய சந்திரிகை கார்யாலயம்,
17. சின்னக்கடைத்தெரு,
தெப்பக்குளம், திருச்சினாப்பள்ளி.

# சிதம்பரம் 14-வது ஆயுர்வேத ஸம்மேளன அறிக்கை.

1947-ம் ௵ மார்ச்சு௴ 9, 10 தேதிகளில் ஸம்மேளனம் சிதம்பரம் பல்லவராயப்பட்டு சத்திரத்தில் நடந்தேறியது. 9-3-47 காலை 7 மணி முதல் 9-30 வரை ஸம்மேளன ஸ்தலத்தில் ஆயுர்வேத சாஸ்த்ர ப்ரவர்த்தகர்களின் முக்யஸ்தரான பகவான் ஸ்ரீ தன்வந்தரிக்கு விசேஷ பூஜைகளும், ஆராதனையும் செய்யப்பட்டு 11 மணிக்கு ஸம்மேளனம் ஆரம்பமாயிற்று,

ஸாஹித்ய சிரோமணி ஸாஹித்ய மனிஷி பண்டிட் P, S, கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளால் தோற்றுவிக்கப் பட்டு நடந்து கொண்டு வரும் சிதம்பரம் ஸ்ரீ பதஞ்சலி வித்யாலய மாணவ மாணவிகளின் கடவுள் வாழ்த்து, தன்வந்தரி பிரார்த்தனையானவுடன் வரவேற்புக் கமிட்டித் தலைவர் N. ஸ்ரீனிவாஸ ரெட்டியார் அவர்கள் பிரதிநிதிகளையும் உள்ளூர் வெளியூர் பிரமுகர்களையும் வரவேற்று பேசினார். பிறகு ஸ்ரீமான் S, A' தேவநாயகய்யா அவர்கள் திறப்பு விழா பிரஸங்கத்தில் மாகாணத்திலுள்ள எல்லா ஆயுர்வேத வைத்தியர்களும் ஒன்று கூடி இம்மாதிரி சம்மேளனங்களில் ஒத்துழைக்க வேண்டும் என்பது போன்ற பல அரிய விஷயங்களை வற்புறுத்திப் பேசினார். பிறகு ஸம்மேளனத் தலைவர் ஸ்ரீமான் வைத்யரத்ன பண்டிட் M. துரைஸ்வாமி அய்யங்கார் A. K. A. C. அவர்களால் அக்ராஸனப் பிரஸங்கம் வெகு நேர்த்தியாக நடந்தேறியது. விஷயாலோசக பொருட் காட்சிக் கமிட்டிகள் அமைக்கப்பட்டுக் காலை கூட்டம் கலைந்து மாலை 3 மணிக்கு மறுபடியும் கூடிற்று. ஸிலோன் முதலிய பல பாகங்களிலிருந்து வந்த பிரபல ஆயுர்வேத வைத்யர்களால் மருந்துகளின் பொருட் காட்சி அமைக்கப் பட்டது போற்றத் தக்கது.

மாலை நடந்த சம்மேளனத்தில் ஆர்தவ தோஷங்களைப் பற்றிய சர்ச்சை விமரிசையாக செய்யப் பட்டு ஷை கட்டுரை எழுதியவர்களில் நேரில் வந்து கட்டுரையை வாசித்து பரீக்ஷகர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருவாரூர் ஸ்ரீ ஸுப்பிரமணிய சர்மா ஆயுர்வேத சிரோமணி அவர்கட்கு தங்கப் பதக்கம் அளிப்பதாக நிச்சயம் செய்யப் பட்டது.

மாலை 5-30 மணிக்கு சம்மேளனம் கலைந்து இரவு 8 மணிக்கு விஷயாலோசனைக் கமிட்டிச் கூட்டம் கூடி மறுநாள் தீர்மானிக்க வேண்டிய விஷயங்களை ஆலோசித்து நிர்த்தாரணம் செய்தது.

*10-3-47 காலை 7-30க்கு இரண்டாம் நாள் சம்மேளனம் ஆரம்பமாகி குழந்தைகளின் குலைக் கட்டிகளின்* (Liver and Spleen enlargement of children) *சர்ச்சை நடந்து ஷெ வியாதியைப்பற்றி கட்டுரை எழுதியவர்களில் L ராஜாவையா, மன்னார்குடி நேரில் வந்து தன் கட்டுரையைப் படித்தார். அன்னாருக்கு ஷெவியாஸத் திற்காகத் தங்கப் பதக்கம் அளிப்பதாக பரீக்ஷகர்களால் நிச்சயம் செய்யப் பட்டது. 11 மணிக்கு மேல் தீர்மானங்களைப் பற்றிய விஷயம் நடைபெற்றுத் தீர்மானங்கள் நிறைவேறப்பெற்றன*

*1-30 க்கு மறுபடியும் கூடி பல தீர்மானங்கள் நிறைவேறின, பரிசுக்குரியவர்களுக்கு தங்கப் பதக்கங்களும் பொருட்காக்ஷியில் கலந்துகொண்ட பல வெளியூர் உள்ளூர் ஆயுர்வேத வைத்தியர்களுக்கு ஸர்டிபிகேட்டுகளும் வழங்கப்பட்டன பிறகு பொதுக்கார் தர்சியின் வருஷாந்தர ரிபோர்ட்டு அங்கீகரிக்கப் பட்டது, தலைவர் முடிவுரைக்குப் பிறகு ஸ்ரீரங்கம் V சுப்ரமணிய அய்யர் அவர்கள் வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்களையும் பிரதிநிதிகளையும் புகழ்ந்து பேசி சம்மேளனத்தைப் பற்றிய தனது த்ருப்திகரமான அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். பிறகு காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு பண்டிட் P S கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள் பதஞ்சலி வித்யாலயம், சிதம்பரம் அவர்களின் மங்கள கீதத்துடன் சம்மேளனம் இனிது நிறைவேறியது.*

---

## வரவு விபரம்

உள்ளூர் பிரமுகர்களிடமிருந்து வரவேற்புக் கமிட்டிக் கட்டணமாகவும், நன்கொடையாகவும் வந்த ரூபாய்கள்.

| ஸ்ரீமான் | ரூ. | அ. |
|---|---|---|
| N ஸ்ரீனிவாஸ ரெட்டியார் (சேர்மன்) | 20 | 0 |
| R கோபால கிருஷ்ண பிள்ளை | 20 | 0 |
| S ரத்னசாமி செட்டியார் | 20 | 0 |
| V ராமச்சந்திர அய்யர் | 10 | 0 |
| மார்க்கண்டம் பிள்ளை | 10 | 0 |
| A D சபாபதி அய்யர் | 10 | 0 |
| P சம்பந்தம் பிள்ளை | 5 | 0 |
| T S தியாகராஜய்யர் | 5 | 0 |
| S திருநாராயணய்யங்கார் | 5 | 0 |

| ஸ்ரீமான் | ரூ. | அ. |
|---|---|---|
| G S ராமநாதய்யர் | 5 | 0 |
| S அருணுசலய்யர் | 5 | 0 |
| Dr. S நடராஜ ஜடாவல்லபர் | 5 | 0 |
| K R நடராஜ சாஸ்திரிகள் | 5 | 0 |
| R ஸ்ரீனிவாஸாச்சாரியார் | 5 | 0 |
| S வைத்யநாதய்யர் | 5 | 0 |
| P S கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் | 5 | 0 |
| N S சிதம்பரேஸ்வர தீக்ஷிதர் | 5 | 0 |
| S T ராஜரத்ன தீக்ஷிதர் | 5 | 0 |
| M வல்லிநாயகம் பிள்ளை | 5 | 0 |
| S K ஜயராமய்யர் | 5 | 0 |
| K D ஸ்ரீனிவாஸய்யங்கார் | 5 | 0 |
| N M பொன்னம்பலம் பிள்ளை | 5 | 0 |
| R S ராமானுஜ ரெட்டியார் | 5 | 0 |
| S மணி அய்யர் | 5 | 0 |
| G கல்யாணம் பிள்ளை | 5 | 0 |
| நடன ஸபாபதி அய்யர் | 5 | 0 |
| N கணபதியா பிள்ளை | 5 | 0 |
| S ராமசாமி அய்யங்கார் | 5 | 0 |
| D ஸ்ரீனிவாஸய்யங்கார் | 5 | 0 |
| T வெங்கடேசம் பிள்ளை | 5 | 0 |
| T M பாலசுப்ரமணிய செட்டியார் | 5 | 0 |
| A S ராமகிருஷ்ணய்யர் | 5 | 0 |
| N K ஜிய்யரய்யர் | 5 | 0 |
| V ராமமூர்த்தி அய்யர் | 5 | 0 |
| A நாராயணஸ்வாமி அய்யர் | 5 | 0 |
| வெங்கட சுப்ரமண்ய அய்யர் | 5 | 0 |

| ஸ்ரீமான் | ரூ. | அ. |
|---|---|---|
| N K நயினு நாயுடு | 4 | 0 |
| K B சிவப்ரகாசம் பிள்ளை | 3 | 0 |
| S ஜகதீசய்யர் | 3 | 0 |
| சதாசிவ நாயகர் | 3 | 0 |
| நாராயணசாமி அய்யர் | 3 | 0 |
| V K நாகராஜய்யர் | 2 | 0 |
| சங்கர தீக்ஷிதர் | 2 | 0 |
| G S வைத்யநாதய்யர் | 2 | 0 |
| K N ராகவாசாரியார் | 5 | 0 |

வெளியூரிலிருந்து வந்த பிரதிநிதிகளிடம் வசூலான பிரதிநிதிக் கட்டணம், பொருட் காக்ஷி கட்டணம், நன்கொடை ரூ.

| | | |
|---|---|---|
| Dr. L ராஜாவையர் | 20 | 0 |
| T V தேவுடு அய்யர் | 15 | 0 |
| T V ராமச்சந்திரன் | 15 | 0 |
| P S ராமசர்மா | 10 | 0 |
| அப்பாஜி | 10 | 0 |
| குஞ்சித பாதன் | 10 | 9 |
| P அருணநாதன் | 10 | 0 |
| S கனகராஜன் | 10 | 0 |
| | 10 | 0 |
| V B நடராஜ சாஸ்திரிகள் | 5 | 0 |
| A ராகவ ராவ் | 5 | 0 |
| S V ஸ்ரீனிவாஸாச்சாரியார் | 5 | 0 |
| T வெங்கடாசலம் செட்டியார் | 5 | 0 |

| Dr. | ரூ. | அ. |
|---|---|---|
| R சேதுராமலிங்க அய்யர் | 5 | 0 |
| A B நெல்லுசாமி படையாட்சி | 5 | 0 |
| M V சுப்ரமணியன் | 5 | 0 |
| S A அனந்தாச்சாரி | 5 | 0 |
| G அகோரமையர் | 5 | 0 |
| T S ஈச்வரய்யர் | 5 | 0 |
| N S ராகவன் | 5 | 0 |
| சிவசுப்ரமண்ய சர்மா | 5 | 0 |
| T V ராதாகிருஷ்ண சாஸ்திரி | 5 | 0 |
| V B லக்ஷ்மீகாந்த சர்மா | 5 | 0 |
| S V ராதாகிருஷ்ண சாஸ்திரி | 5 | 0 |
| M சங்கர வைத்யர் | 5 | 0 |
| V சுப்ரமண்ய அய்யர் | 5 | 0 |
| C M சிவசுப்ரமண்யம் | 5 | 0 |
| ஆக | 467 | 0 |

## செலவு விபரம்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| அச்சிடுதல்; அக்ராஸன ப்ரஸங்கம், வரவேற்புக் கமிட்டித் தலைவர் பிரஸங்கம், கவர், கார்டு, லெட்டர் பேப்பர், பில், சர்டிபிகேட், அழைப்புப் பத்திரிகை முதலியன | 113 | 0 | 0 |
| ஸ்டாம்பும் பேப்பரும் | 60 | 4 | 3 |
| கார், வண்டி, ஆள்கூலி | 27 | 8 | 0 |
| லைட் ரிப்பேரும் வாடகையும் | 20 | 8 | 0 |
| தண்ணீர், கரெண்டுச் செலவு | 5 | 0 | 0 |
| சக்கரைபர்மிட்டுக்கு விருத்தாசலத்துக்கு | 4 | 0 | 0 |
| ட்ரெயின், பஸ் செலவு | 15 | 8 | 0 |
| டைப் | 8 | 0 | 0 |
| புஷ்பம், மாலை | 17 | 0 | 0 |
| சந்தனம், வத்தி, பூஜை சாமான் வகை | 6 | 2 | 0 |
| வாழைமரம், துணி போர்டு | 10 | 4 | 0 |

### சாப்பாடு & காப்பிச் செலவு

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஸ்வீட், அரிசியும் மளிகை சாமானும் | 111 | 6 | 0 |
| நல்லெண்ணை கரிகாய் இலை | 60 | 4 | 0 |
| விறகு, தேங்காய் | 19 | 4 | 0 |
| சர்க்கரை | 7 | 4 | 6 |
| தயிர், பால், காபி பௌடர், நெய் | 47 | 2 | 0 |
| அப்பளாம் | 3 | 8 | 0 |
| வெற்றிலை வாஸனை சீவல் புகையிலை | 6 | 8 | 0 |
| சமையற்கூலி | 30 | 0 | 0 |
| சில்லரைச் செலவு | 4 | 8 | 0 |
| மொத்தச்செலவு | 576 | 14 | 9 |
| மொத்த வரவு | 467 | 0 | 0 |

கார்யதர்சியின் கையிலிருந்து அதிகப்படி செலவு செய்யப்பட்டது ரூ. 109 14 9

P. S. ஸ்ரீனிவாஸய்யர்,
வரவேற்பு சங்கக் கார்யதர்சீ,

வைத்ய வாசஸ்பதி பண்டிட்

## P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினல் கண்டு பிடிக்கப்பட்ட

கைகண்ட பலனளிக்கும்

# "சக்தி ஸஞ்சீவி

(Regd.)

குழந்தைகளுடைய சுரல் குலைக் கட்டிகளை எந்நிலைமையிலும்

போக்குவதிலும் வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்,

எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:—

## ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலா,

கரூர், S. I. Ry.

தந்தி: "ATREYA"

## ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்

தென்னூர் ரோடு, திருச்சினாப்பள்ளி.

பிரதானவைத்யர்:— V. B. நடராஜசாஸ்த்ரீ,
**ஆயுர்வேதாசார்ய, வைத்யவிசாரத, வைத்ய வாசஸ்பதி.**

விரண வைத்தியம் (Surgery) உள்பட ஸகலவிதமான
சிகித்ஸைகளுக்கும், நவரைக்கிழி, தாரை பிழிச்சல்
முதலிய பஞ்சகர்மாங்க சிகித்ஸைகளுக்கும்
வெகு காலமாய் மிகப்பிரஸித்தமானது.

**நோயாளிகள் வஸித்து சிகித்ஸை பெற நல்ல வசதியுள்ள**
**ஆரோக்கியசாலை (NURSING HOME) யுடன் விளங்குகிறது.**

குழந்தைகளுக்கு அமிருதமான உணவு
தாய்ப்பால் ஒன்றே



## பயஸ்யா

**தாய்ப் பாலை**
**மிகுதியாய்ப் பெருக்குகிறது.**

**புட்டி ரூ. 3 4 0**
தபால் செலவு வேறு.

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்
அல்லது நேரில்.


Published by Pandit S. M. Sundararajacharya for Tamil Nad Ayurveda Maha Mandalam & Printed at the Sri Vilasam Press, Srirangam.